Vision Initiative

A partnership promoting eye health and vision care

# பார்வையற்றோர் அல்லது பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கான சேவைகள்

## Services for people who are blind or vision impaired

பார்வையற்றோர் அல்லது பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கான ஆதரவுதவிகளும் சேவைகளும் பல உள்ளன.

உங்களது பார்வை இழப்பிற்கு ஏற்ப உங்களை நீங்கள் சரி செய்துகொள்ளவும் உங்களது பார்வைத் திறனை முடிந்த அளவிற்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவும் உங்களுக்கு உதவ இச் சேவைகளால் உங்களது தேகைளை மதிப்பீடு செய்ய இயலும்.

நீங்கள் தொடர்ந்து சுதந்திரமாக செயல்படுவதையும் விரும்பும் காரியங்களில் நீங்கள் ஈடுபடுவதையும் உறுதி செய்யும் வகையில் அன்றாட அலுவல்களைச் செய்வதற்கான புதிய வழிகளை நீங்கள் கற்றுக்கொள்ள இந்த சேவைகள் உங்களுடன் இணைந்து பணியாற்றும்.

சிறப்புத்துவம் பெற்ற அமைப்புக்களாலும், சில பார்வைச் சோதகர்கள் (optometrists) மற்றும் கண் மருத்துவர்க(ophthalmologists)ளால் சேவைகள் வழங்கப்படும்.

இந்த சேவைகளை அணுக உங்களுக்குப் பரிந்துரை தேவையில்லை (கண் மருத்துவர் நீங்கலாக).

There are many supports and services available for people who are blind or vision impaired.

These services can assess your needs to help you adjust to vision loss, and make the most of your vision. They work with you to learn new ways to carry out everyday tasks to make sure you can continue to be independent and participate in your chosen activities.

Services are provided by specialist organisations as well as some optometrists and some ophthalmologists.

You do not need a referral to access these services (excluding ophthalmology).

## ஆதரவுதவி சேவைகளால் எனக்கு எவ்வாறு உதவ இயலும்?

பின்வரும் விடயங்களில் ஆதரவுதவி சேவைகளால் உதவ இயலும்:

## How can support services help me?

Support services can help with:

Tamil. April 2017.
விக்டோரிய மாநில அரசாங்கத்தின் ஆதரவிற்கு Vision 2020 Australia ஏற்பு அளிக்கிறது

VICTORIA State Government

- வாசித்தல், எழுதுதல், கணினியைப் பாவித்தல் அல்லது சமைத்தல். உருப்பெருக்கிகள், கணினித் திரை வாசிப்பு சாதனம், சரியளவிலான வெளிச்சம், வீட்டு சாதனங்களுக்கான தொட்டுத் தெரிந்துகொள்ளும் அடையாளங்கள், எளிதில் அணுகக்கூடிய கைப்பேசிகள் மற்றும் மென்பொருள் சாதனங்களுக்கான 'பயன்பாடுகள் ('apps') போன்ற உங்களது அன்றாட அலுவல்களில் உதவக் கூடிய பல உபகரணங்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் உள்ளன.
- உங்கள் வீட்டிலும், வேலையிலும், சமூகத்திலும் பாதுகாப்பாக நடமாடுதல். நீங்கள் செல்ல விரும்பும் பகுதிகளில் எப்படி வழியறிந்து செல்வது என்பதை உங்களுக்கு சொல்லித்தரக் கூடிய பயிற்சி பெற்ற நிபுணர்கள் உள்ளனர். நீண்ட கம்பு அல்லது வழிகாட்டி நாய் ஒன்றை எவ்வாறு பாவிப்பது என்பதை இது உள்ளடக்கக் கூடும்.
- உங்களுக்குப் பிடித்தமான சமூக, விளையாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகளில் பங்குபற்ற. பகல்நேர நடவடிக்கைத் திட்டங்கள் அல்லது நூலக சேவைகளை பல சேவைகள் ஏற்பாடு செய்யும்.

அறிவுரையாலோசணை சேவைகள், உள்ளூர்ப்பகுதி ஆதரவுதவிக் குழுக்கள் மற்றும் வேலைவாய்ப்பு சேவைகள் ஆகியவற்றையும் சில அமைப்புகள் வழங்கக்கூடும்.

## இந்த ஆதரவுதவி சேவைகளை நான் எப்போது அணுக வேண்டும்?

நீங்கள் பார்வையற்றவராகவோ அல்லது பார்வைக் குறைபாடு உள்ளவராகவோ இருந்தால், ஆதரவுதவி சேவைகளை நீங்கள் எச் சமயத்திலும் அணுகலாம்.

பார்வை இழப்பினால் உங்களுடைய அன்றாட வாழ்க்கையின் மீது எப்போது தாக்கம் ஏற்படத் துவங்குகிறதோ அப்போது இச் சேவைகளுடன் தொடர்புகொள்வதை நீங்கள் கருத்தில்கொள்ள வேண்டும்.

பார்வை இழப்பு அதிகமாக அதிகமாக வெவ்வேறு சேவைகளை நீங்கள் பாவிக்கலாம்.

ஆதரவுதவி சேவை ஒன்றுடன் நீங்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தாலும், உங்களுடைய பார்வைச் சோதகர், கண் மருத்துவர் அல்லது பொது மருத்துவர் ஆகியோரிடம் தவறாமல் மீளாய்வுகளை மேற்கொள்ள மறந்துவிடாதீர்கள்.

- Reading, writing, using a computer or cooking. Many aids, equipment and technologies are available such as magnifiers, screen readers for computers, correct lighting, tactile markers for household appliances, accessible mobile phones and 'apps' (software applications) that can help with everyday tasks.
- Moving about your home, at work and in the community safely. Trained specialists can teach you to navigate areas you wish to travel in. This may include how to use a long cane or a dog guide.
- Participating in your favourite social, sport and cultural activities. Many services organise day activity programs or offer library services

Some organisations may also provide counselling services, local support groups and employment services.

## When should I access these support services?

If you are blind or vision impaired, you can access support services at any time.

You should consider contacting them when your vision loss starts to impact on your daily life.

Different services can be used as vision loss progresses.

Don't forget to keep having regular reviews with your optometrist or ophthalmologist, even if you are engaged with a support service.

## மேலதிகத் தகவல்களுக்கு

உங்களுடைய உள்ளூர்ப் பகுதிகளில் கிடைக்கும் சேவைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள உங்களுடைய பார்வைச் சோதகர், கண் மருத்துவர் அல்லது பொது மருத்துவருடன பேசுங்கள்.

உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள பார்வைச் சோதனையாளர் ஒருவரைக் கண்டறிய www.optometry.org.au/victoria எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள கண்மருத்துவர் ஒருவரைக் கண்டறிய www.ranzco.edu எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

கண் நலத்தைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள www.visioninitiative.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

## விக்டோரிய மாநிலத்திலுள்ள பார்வைக் குறைபாட்டு சேவைகள்

**Australian College of Optometry** – குறை பார்வை மருந்தகம்: (03) 9349 7400 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.aco.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Guide Dogs Victoria:** (03) 9854 4444 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.guidedogsvictoria.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Vision Australia:** 1300 847 466 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.visionaustralia.org எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

## தகவல்கள் மற்றும் ஆதரவுதவி சேவைகள்

**Blind Citizens Australia:** 1800 033 066 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.bca.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Glaucoma Australia:** 1800 500 880 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.glaucoma.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

## For more information

To find out the services available in your local area, speak to your optometrist, ophthalmologist or GP.

To find a local optometrist visit www.optometry.org.au/victoria

To find a local ophthalmologist visit www.ranzco.edu

To find out more about eye health visit www.visioninitiative.org.au

## Low vision services in Victoria

**Australian College of Optometry** - low vision clinic: call (03) 9349 7400 or visit www.aco.org.au

**Guide Dogs Victoria:** call (03) 9854 4444 or visit www.guidedogsvictoria.com.au

**Vision Australia:** call 1300 847 466 or visit www.visionaustralia.org

## Information and support services

**Blind Citizens Australia:** call 1800 033 066 or visit www.bca.org.au

**Glaucoma Australia:** call 1800 500 880 or visit www.glaucoma.org.au

**Keratoconus Australia:** 0409 644 811 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.keratoconus.asn.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Macular Disease Foundation Australia:** 1800 111 709 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.mdfoundation.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Retina Australia:** 1800 999 870 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.retinaaustralia.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Royal Institute for Deaf and Blind Children:** (02) 9871 1233 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.ridbc.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Keratoconus Australia:** call 0409 644 811 or visit www.keratoconus.asn.au

**Macular Disease Foundation Australia:** call 1800 111 709 or visit www.mdfoundation.com.au

**Retina Australia:** call 1800 999 870 or visit www.retinaaustralia.com.au

**Royal Institute for Deaf and Blind Children:** call (02) 9871 1233 or visit www.ridbc.org.au